## சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசு, சமூக பாதுகாப்புத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியரை, தலைவராக கொண்டு செயல்படும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில், ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிட கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**பணியிடங்களின் விபரம்**

| வ. எண் | பணி விபரம் | எண்ணிக்கை | தகுதிகள் | ஊதியம் |
|---|---|---|---|---|
| 1. | பாதுகாப்பு அலுவலர், (இல்லம் சாரா) | 1 | இளங்கலை / முதுகலை பட்டதாரி (10, +2, +3 மாதிரி) உளவியல் / சமூகப்பணி / சமூகவியல்களின் வழிகாட்டுதல் மற்றும் குழந்தைகள் நல குற்றவியல் கல்வி ஆகிய கல்வியில் ஏதேனும் ஒன்றில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குழந்தை சார்ந்த பணியில் 3 வருடங்கள் முன்அனுபவம் பெற்றவராகவும், 40 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.<br><br>அரசு பணியில் ஓய்வு பெற்று 62 வயதிற்கு மிகாமல் குருப்-B அல்லது அதற்குமேல் பணி செய்திருக்க வேண்டும். | 21,000/- |
| 2. | ஆற்றுப்படுத்துநர் | 1 | இளங்கலை / முதுகலை பட்டதாரி (10, +2, +3 மாதிரி) உளவியல் / சமூகப்பணி / சமூகவியல்களின் வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குழந்தை சார்ந்த பணியில் 2 வருடங்கள் முன்அனுபவம் பெற்றவராகவும், 40 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். | 14,000/- |

மேற்கண்ட பதவிகளுக்கு தகுதியான நபர்கள் புகைப்படத்துடன் கூடிய தங்களது சுய விபரகுறிப்புடன், சான்றிதழ்களின் நகல்களையும் இணைத்து **26 .07.2021** அன்று மாலை **05:00** மணிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு வந்து சேரும் வகையில் அனுப்பப்படவேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளுக்கு வீண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.

(த.பி.பா)

மேற்காணும் பணியிடத்திற்கான விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது மாவட்ட ஆட்சியர் அவர்களின் https://sivaganga.nic.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து, தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் முகவரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது அஞ்சல் முலமாகவோ 26/07/2021 அன்று மாலை 05.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு வந்துசேரும் வகையில் அனுப்பிவைத்திட தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**

**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,**
**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம்,**
**3/1-1 பெரியார் நகர், முதல் தெரு,**
**அனைத்து மகளிர் காவல் நிலையம் எதிரில்,**
**திருப்பத்தூர் சாலை,**
**சிவகங்கை - 630561.**

தலைவர் / மாவட்ட ஆட்சியர்
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
சிவகங்கை.